மூலமாக பல நல்ல மருத்துவப் பொருட்கள்கூட கிடைக்கின்ற வாய்ப்பு இருக்கின்றது. அதை ஆராய்ச்சி செய்வதற்கு அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் குறிப்பிட்டுள்ள தொகுதிகள் மட்டும் தமிழக அரசால் வெளியிடப்பட்டது. நான் சொன்னதுபோல் மத்திய அரசும் சில தொகுப்புகளை வெளியிட்டிருக்கிறது. அதிலும் இல்லாவிட்டால் மாண்புமிகு உறுப்பினர் கேட்டதற்கிணங்க அந்தக் கல்வெட்டுகளை ஆராய்ந்து, அதை வெளியிடுவதற்கு இந்த அரசு அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கு. பிச்சாண்டி.

திரு. கு. பிச்சாண்டி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை கோயிலிலும், படவேடு கோயிலிலும், படவேடு சுற்றியும் இன்றைக்கு அகழ்வாராய்ச்சியில் பல பொருட்கள் கிடைக்கின்றன. அங்கே சம்புவராயர் வாழ்ந்த காலத்து கல்வெட்டுகள் எல்லாம் கிடைக்கின்றன. ஆகவே அதைப் பற்றிய தொகுப்பை அரசு வெளியிட ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 159, திரு. எஸ்.எம். சீனிவேல், மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்.

159—

பெண்கள் கல்லூரி

***18629—திரு. எஸ்.எம். சீனிவேல்:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2002 ஏப்ரல் 18]

திருப்பரங்குன்றம் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் சார்பாக பெண்கள் கல்லூரி ஏற்படுத்தித் தர அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருப்பரங்குன்றம் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் சார்பாக பெண்கள் கல்லூரி ஏற்படுத்த இந்து சமய அறநிலைய சட்ட விதிகளில் இடமில்லாததோடு, அவ்வாறான நோக்கம் ஏதும் திருக்கோயில் நிருவாகத்திற்கு இல்லை. அதற்கான போதிய நிதி வசதியும் இல்லை.

திரு. எஸ்.எம். சீனிவேல்: மாண்புமிகு அம்மாவின் திசை நோக்கி வணங்குகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை புறநகர் மாவட்டம், மதுரை மாநகர் மாவட்டத்திற்குள்ளே சுமார் 40-க்கும் மேற்பட்ட மேல்நிலைப் பள்ளிகள் உள்ளன. ஆனால் அவர்கள் மேல்நிலைப் பள்ளிப் படிப்பை முடித்துவிட்டு கல்லூரிக்குச் செல்லுகிறபோது, கல்லூரியிலே மனுக்களைப் போடும்போது, அவர்களுடைய தாய்மார்களும், தந்தைமார்களும், அலையோ, அலையோ என்று அலையக்கூடிய ஓர் அவலநிலை ஏற்படுகிறது. 3 கல்லூரிகள்தான் மதுரை மாநகரத்தில் உள்ளன. அதிலே ஒன்றுதான் அரசு கல்லூரி. இந்த சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலில் நல்ல வருமானம் வருகிறது. இப்போதுகூட, 1½ கோடி ரூபாய் இருப்பு இருக்கின்றது. அதுமட்டுமல்ல, இட வசதி, கிட்டத்தட்ட 100 ஏக்கர் அகலத்தில், மெயின் ரோட்டிலே, பள்ளிக்கூடத்தைச் சுற்றி அங்கேயே இருக்கிறது. கோயிலைச் சுற்றியே இருக்கிறது. ஆகையினால் தாயுள்ளம் கொண்ட அம்மா ஆட்சியில், அதிலும் குறிப்பாக பெண்களுக்கு தனி முக்கியத்துவம் கொடுக்கக்கூடிய மாண்புமிகு எங்களுடைய அன்புத் தெய்வத்தினுடைய ஆட்சியில், பணம், பொருளாதாரம் இருக்கிறது. எங்கள் சாமி பணக்கார சாமி. ஆகையினாலே மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களை அன்போடு, பணிவோடு, கனிவோடு, கட்டித்தர வேண்டுமென்று, கல்லூரியை நடத்த வேண்டுமென்று, அன்போடு கேட்டு விடைபெறுகிறேன். நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பணக்கார சாமியை ஏழையாக்கிடாதீங்க. (சிரிப்பு)

மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாவட்டம், திருப்பரங்குன்றம் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் உதவி ஆணையர்/செயல் அலுவலரால் நிருவகிக்கப்பட்டு வருகிறது. இத்திருக்கோயிலில் தக்காராக மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயில் இணை ஆணையர் செயல் அலுவலர் செயல்படுகிறார். இத்திருக்கோயில் இந்து சமய அறநிலைய சட்டப் பிரிவு 46 (3)-ன்கீழ்...*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அமைச்சர் அவர்கள், பெண்கள் கல்லூரி அமைக்கப்படுமா? முடியாதா?*

மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி: *அதைத்தான் சொல்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *சரி, சொல்லுங்கள்.*

மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி: *சட்டப் பிரிவு 46(3)-ன்கீழ் பிரசுரிக்கப்பட்ட கோயிலாகும். உதவித்தொகை நிர்ணய வருமானம் பசலி 1410-ல் ரூ.1,03,66,998/- என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இத்திருக்கோயிலில் 1.62 கோடி ரூபாய் முதலீட்டுத் தொகை உள்ளது. இங்கு ஒரு பெண்கள் மேல்நிலைப் பள்ளி நடத்தப்பட்டு வருகிறது. இதில் 36 ஆசிரியர்களும் 1617 மாணவிகளும் உள்ளனர். இப்பள்ளி அரசு உதவி பெறும் பள்ளியாக இயங்கி வருகின்றது. இந்து சமய அறநிலையச் சட்ட விதிகளின்படி கல்லூரி தொடங்குவதற்கு வழிவகை இல்லை. இந்து சமய அறநிலையச் சட்டப் பிரிவு 66-ன்படி அர்ச்சகர்கள், அத்யாபாகர், வேதபாராயணர் மற்றும் ஓதுவார்களுக்கு பயிற்சி அளிக்கவும் மற்றும் திவ்வியப் பிரபந்தம், தேவாரம் போன்றவற்றைப் பயிற்றுவிக்கவும், அதனை ஒத்த கல்வியைப் போதிக்கவும், இந்து சமயம், தத்துவம், சாஸ்திரங்கள், இந்து திருக்கோயில் கட்டடக் கலைகள் போன்ற நிறுவனங்களை நிறுவவும் திருக்கோயில் உபரி நிதிகளைப் பயன்படுத்த வேண்டியுள்ள காரணத்தினாலே கல்லூரி அமைப்பதற்கு போதிய நிதியில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா எண் 160, திரு. பி.கே. சேகர்பாபு, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.*